# இரண்டாம் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2020

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | | |

நேரம்:3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்:90

அறிவுரைகள்:
(1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப் பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.
(3) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

14×1=14

### பகுதி -I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.)

1) சிற்பி பாலசுப்பிரமணியத்தின் படைப்புகள் சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிதை நூல்
அ) பூஜ்யங்களின் சங்கிலி ஆ) நிலவுப்பூ
இ) ஒளிப்பறவை ஈ) ஒரு கிராமத்து நதி

2) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்ப்பாயாக என்று ஜலாலுத்தின் ரூமி குறிப்பிடுவது.
அ) அக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

3) செல்லிடத்து = செல் + இடத்து
அ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்
ஆ) முன்னின்றமெய் திரிதல் உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
இ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
ஈ) உயிர்வரின் உக்குறள்மெய் விட்டோடும்

4) சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம்
இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

5) பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) ஆமந்திரிகை | - | 1) பட்டத்துயானை |
| ஆ) அரசு உவா | - | 2) மூங்கில் |
| இ) கழஞ்சு | - | 3) இடக்கை வாத்தியம் |
| ஈ) கழை | - | 4) எடை அளவு |

அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

6) இலக்கணக்குறிப்பு எழுதுக. வெங்குருதி
அ) வினைத்தொகை ஆ) உருவகம்
இ) பண்புத் தொகை ஈ) வினையெச்சம்

7) உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்
அ) உண்டு ஆ) பிறந்து இ) இடந்தனில் ஈ) வளர்ந்த

8) சாபவிமோசனம் அகலிகை கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) ஜெயமோகன் ஆ) கு. அழகிரிசாமி
இ) புதுமைப்பித்தன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

9) அதிசய மலர் கவிதையோடு தொடர்புடையவர்
அ) தமிழ் நதி ஆ) ஐராவதம் மகாதேவன்
இ) முகம்மது இராவுத்தர் ஈ) வெ. இறையன்பு

10) அல்லல் படுப்பதூம்இல் - எவரோடு பழகினாள்
அ) மெய்ப்பொருள் காண்பவர் ஆ) தீயினத்தார்
இ) வாள்போல் பகைவர் ஈ) எண்ணியாங்கு எய்துபவர்

11) விளியறி ஞமலி இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

12) வித்தியாரம்பம் என்பது
அ) எழுத்துப்பயிற்சி ஆ) கல்விப் பயிற்சி
இ) கல்வித் தொடக்கம் ஈ) ஆசிரியர்

13) கடலின் பெரிது
அ) தினையளவு செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) உற்றகாலத்தில் செய்த உதவி ஈ) இவை அனைத்தும்

14) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15) வசனம் கவிதை வேறுபாடு தருக.

16) நிலையாமை குறித்து சவுரி உரைக்கும் கருத்து யாது?

17) 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக - எவற்றை வலியுறுத்துவாய்?

18) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19) 'தமிழர் வளர்த்த அழகு கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

20) செவியறிவுறுஉ துறையை விளக்குக.

21) 'மனத்தை அதன் போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை எழுதுக.** **7×2=14**

22) உவமைத் தொடர்களை சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
தாமரை இலை நீர் போல அச்சாணி இல்லாத தேர் போல

23) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுது. விளை, விழை

24) இலக்கணக் குறிப்பு தருக.
அன்பும் அறனும், மறத்தல்

25) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுது.
நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்ட்டது.
இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்

26) கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
குதிரை, வேகம் ஓடு, தாவு
வானம், பற, நிலவு, தொடு

27) ஏதேனும் ஒன்றுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக. 1) பழித்தனர் 2) களைந்து
28) ஏதேனும் ஒன்றுக்கு புணர்ச்சி விதி கூறுக. 1) முன்னுடை 2) ஏழையென
29) தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்
முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்
வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன.
வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்
30) கலைச் சொல் எழுதுக. எழுதுக. Biography, Arrival.

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

31) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். - விளக்குக.
32) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
33) "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.
34) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

35) 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.
36) உவமையணியை எடுத்துக்காட்டு கூறி விளக்குக.
37) எங்கிருந்தோ வருகிறது வண்ணத்துப் பூச்சியொன்று பறவைகளும் வரக்கூடும் நாளை - இடைஞ்சுட்டி பொருள் விளக்குக.
38) கொடை வழங்குவதில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×4=12

குறிப்பு:- காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண் 40-க்கு மாற்று வினா வழங்கப் பட்டுள்ளது.

39) இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய நயங்கள் மூன்றினை எடுத்தெழுதுக.

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - ஆண்டித்
தீண்ட ஒண்ணாதார்! - கவிமணி தேசிக விநாயகம்.

40) தமிழாக்கம் தருக:

Periyar was not only a great social revolutionary; he was something more than that. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளிக்கான மாற்றுவினா. பின்வரும் பத்தியை கவனமாக படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

40) (அ) முதல் (ஈ) வரை

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை மொழியே மக்களின் அறிவை வளர்த்து உணர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சை கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும் மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சி ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே: மொழியால் வளருபவரும் மக்களே.

அ) மொழி என்பது என்ன?

ஆ) பெற்ற தாயின் முதல் வேட்கை எது?

இ) குழந்தையின் மன வளர்ச்சியோடு தொடர்புடையது எது?

ஈ) மொழியால் வளர்ந்து அமைந்தது எது?

41) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

42) பின்வரும் பலமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

43) கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச் சொல்லைத் தொடர் களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

1) நேற்று முதல் ______ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
2) உங்களுக்கு ______ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
3) முருகன் ______ (வேகம்) செல்லும் பேருந்தைப் பிடிக்க இயழவில்லை.
4) நம்முடைய ______ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3×6=18**

44) அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க. **(அல்லது)**

ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

45) அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் - பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. - எவ்வாறு விளக்குக. **(அல்லது)**

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா (அல்லது) கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46) அ) 'சாலை விபத்தில்லா தமிழ்நாடு' - இககூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை? **(அல்லது)**

ஆ) **"கோடைமழை"** கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேய பண்புகளை விளக்குக.

## பகுதி - V

**அடிபிறழமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

**4+2=6**

47) அ) **" அறிவும் புகழும் ................"** என தொடங்கும் புறநானூறு செய்யுளை எழுதுக.

ஆ) **"உருவுகண்டு ......................"** எனத் தொடங்கும் குறளை எழுதுக.

****************